| Question Booklet Series **A** | **ZX-25** | Question Booklet Serial No. 50913 |
|---|---|---|
| வினாத் தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை No. of pages in Question Booklet : **56** | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு) Roll No. (As in Hall ticket) | 2 | 5 | P | G | 0 | 4 | 0 | 3 | 26 0192 |

2. பாடம் Subject **Physics** Subject Code **ZPX4**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்) OMR Answer Sheet No. (To be filled in by the candidate) | 5 | 1 | 5 | 3 | 1 | 2 |

4. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி) Candidate's Name (As given in Application form): RAJALAKSHMI G

5. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி) Candidate's Signature (As given in Application form): G. Rajalakshmi

6. கண்காணிப்பாளரின் கையொப்பம் Invigilator's Signature: 12/10/25

இந்த வினாத்தாளில் 180 கொள்குறி வகை வினாக்கள் உள்ளன. இந்த வினாத்தொகுப்பானது இரு பகுதிகளைக் கொண்டது. **பகுதி-'A'**-வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும், 21 முதல் 30 வரை ஒருமதிப்பெண் வினாக்களும் கொண்டுள்ளது. **பகுதி-'B'** 150 ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்படமாட்டாது.

This booklet contains 180 multiple choice questions. This Question Booklet is made up of 2 Parts. Part 'A' contains 30 questions (Q. No. 1 to 30). Q. No. 1 to 20 is of 2 marks each. Question No. 21 to 30 is of 1 mark each. Part 'B' contains 150 questions (Q. No. 31 to 180). Each question is of 1 mark each. There is no negative marking for wrong answer.

அரசாணை (நிலை) எண் 49, மனிதவள மேலாண்மை (எம்)த் துறை நாள் 23.05.2022 -ன்படி மாற்றுத் திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

As per G.O. (Ms) No. 49, Human Resources (M) Department, dated 23.05.2022 differently abled candidates are exempted from the Compulsory Tamil Language eligibility test.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கால அளவு | பொதுத் தேர்வர்கள் | 210 நிமிடங்கள் |
| | மாற்றுத்திறனாளி தேர்வர்கள் | 240 நிமிடங்கள் |
| Allotted time | General candidates | 210 minutes |
| | Differently abled candidates | 240 minutes |

(இறுதிப் பக்கமான பக்கம் எண் **55, 56** ல் தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளைப் படிக்கவும்)

## PART - A

1. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று அளித்த உணவாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் உணவு :
   (A) தினைச் சோறு
   (B) குழல் மீன் கறி
   (C) தேனும் தினைமாவும்
   (D) ஊன் சோறு

2. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினம் :
   (A) பெண் விடுதலையைப் பின்னணியாகக் கொண்டது.
   (B) பழந்தமிழர் பண்பாட்டினை மையமாகக் கொண்டது.
   (C) விளிம்புநிலை மக்கள் வாழ்வை மையமாகக் கொண்டது.
   (D) இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டது.

3. கண்ணிற்குக் காட்சி தராமல் அரியனவாய் இருக்கும் மலரைத் தேர்க.
   (A) நெருஞ்சி மலர்
   (B) பூளை மலர்
   (C) பலா மலர்
   (D) கள்ளி மலர்

4. அகவற்பாவுக்குப் **பொருந்தாத** நூலைத் தேர்க.
   (A) மணிமேகலை
   (B) சிலப்பதிகாரம்
   (C) பெருங்கதை
   (D) நாலடியார்

5. கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றவர் :
   (A) கம்பர்
   (B) சீத்தலைச் சாத்தனார்
   (C) இளங்கோவடிகள்
   (D) வீரமாமுனிவர்

6. கொற்கையின் அரசனாகவும், புலவராகவும் இருந்தவர் :
   (A) செங்குட்டுவன்
   (B) நெடுஞ்செழியன்
   (C) கீரந்தையார்
   (D) அதிவீரராம பாண்டியர்

7. 'உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும் செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள பண்புத் தொகைச் சொல்லைத் தேர்க.
   (A) ஊழி ஊழ்
   (B) உந்து வளி
   (C) ஊழியும்
   (D) செந்தீ

8. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | காலக்கணிதம் | (i) | கீரந்தையார் |
| (b) | மேகம் | (ii) | அதிவீரராம பாண்டியன் |
| (c) | காசிக்காண்டம் | (iii) | கண்ணதாசன் |
| (d) | பரிபாடல் | (iv) | நாகூர்ரூமி |

   (A) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
   (B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
   (C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
   (D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

9. மாறன் தன் நண்பன் இனியனிடம் ''இந்த மாறன் ஒரு நாளும் நேரம் தவறமாட்டான்'' என்று கூறுவது :

(A) மரபு வழுவமைதி
(B) கால வழுவமைதி
(C) இட வழுவமைதி
(D) பால் வழுவமைதி

10. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வீசு தென்றல் | (i) | பண்புத் தொகை |
| (b) | நன்மொழி | (ii) | உம்மைத் தொகை |
| (c) | அண்ணன் தம்பி | (iii) | இருபெய-ரொட்டுப் பண்புத் தொகை |
| (d) | சாரைப் பாம்பு | (iv) | வினைத் தொகை |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
(B) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(C) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)
(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

11. ''பெண்ணினைப் பாகம் கொண்ட
பெருந்தகைப் பரமயோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன்
கேட்டு வானோர்''

- இவ்வடிகளில் பாண்டியனைக் குறிக்கும் சொல்லைத் தேர்க.

(A) பரமயோகி
(B) மீனவன்
(C) பெருந்தகை
(D) வானோர்

12. 'வானம் வசப்படும்' என்ற பிரபஞ்சனின் படைப்பு :

(A) கவிதை நூல்
(B) வரலாற்றுப் புதினம்
(C) சிறுகதைத் தொகுப்பு
(D) சூழலியல் கட்டுரை

13. 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' என்னும் உரிப்பொருளுக்குரிய திணை :

(A) நெய்தல்
(B) குறிஞ்சி
(C) பாலை
(D) மருதம்

14. ''இல் நுழை கதிர்'' என்னும் சொல்லின் பொருளினைத் தேர்ந்தெடுக்க.

(A) இல்லத்துள் நுழையும் விளக்கின் ஒளிக்கற்றை
(B) இல்லத்துள் நுழையாத விளக்கின் ஒளிக்கற்றை
(C) இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக்கற்றை
(D) இல்லத்துள் நுழையாத கதிரவனின் ஒளிக்கற்றை

15. கால வழுவமைதியைத் தேர்க.

(A) இந்த மகிழன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான்.

(B) தமிழினி இரவு சோறு உண்டான்.

(C) வீட்டில் காகம் கத்தினால் உறவினர் வருவர்.

(D) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

16. "உனக்குப் படிக்கத் தெரியாது"

- என்ற நூல் யாரை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

(A) மருத்துவர் முத்துலெட்சுமி

(B) மேரி மெக்லியோட் பெத்யூன்

(C) கமலாலயன்

(D) மிஸ் வில்ஸன்

17. **கூற்று (1) :** வலிமையை நிலைநாட்ட நடைபெற்ற போரில் வெற்றி பெற்ற அரசர் தும்பைப் பூவைச் சூடி மகிழ்வர்.

**கூற்று (2) :** வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பகையரசர்கள் இருவர் தத்தம் வலிமையை நிலைநாட்ட வாகைப் பூவைச் சூடி மகிழ்வர்.

(A) **கூற்று (1), (2) இரண்டும் சரி**

(B) **கூற்று (1), (2) இரண்டும் தவறு**

(C) **கூற்று (1) சரி, கூற்று (2) தவறு**

(D) **கூற்று (1) தவறு, கூற்று (2) சரி**

18. 'எற்பாடு' என்பது :

(A) பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

(B) முன்பனிக்காலம்

(C) ஞாயிறு மறையும் நேரம்

(D) காலை 6 மணி முதல் 10 மணி வரை

19. இலையின் பெயரைக் குறிக்காத சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) தாள்

(B) கழை

(C) ஓலை

(D) தோகை

20. அரசனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணையைப் பாடுவது :

(A) பெருந்திணை

(B) வாகைத் திணை

(C) பொதுவியல் திணை

(D) பாடாண்திணை

21. 'வேம்பு, ஆமணக்கு' இவற்றைக் குறிக்கும் சொல் :

(A) கூலம்

(B) முத்து

(C) விதை

(D) முதிரை

22. 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் மு. கருணாநிதிக்கு வழங்கப்பட்ட விழா :

(A) 'பழநியப்பன்' நாடகப் பாராட்டு விழா

(B) செம்மொழி மாநாட்டு விழா

(C) தூக்கு மேடை நாடகப் பாராட்டு விழா

(D) பராசக்தி வெற்றி விழா

23. சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றவர் :

(A) பாரதியார்

(B) திரு.வி.க

(C) கவிமணி

(D) அயோத்திதாசர்

24. வடமொழிக் கதையைத் தழுவி எழுதப்பட்ட நூல் :

(A) சீவகசிந்தாமணி

(B) சிலப்பதிகாரம்

(C) மணிமேகலை

(D) பெரியபுராணம்

25. எதிர்மறைத் தொழிற்பெயரைத் தேர்க.

(A) வாழ்க்கை

(B) நடவாமை

(C) ஈதல்

(D) காட்சி

26. 'விருந்தே புதுமை' - என்றவர் :

(A) தொல்காப்பியர்

(B) இளங்கோவடிகள்

(C) கம்பர்

(D) திருவள்ளுவர்

27. **கூற்று (1)** : ஆசிரியப்பா ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**கூற்று (2)** : இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை அமைவது ஆசிரியப்பா ஆகும்.

(A) **கூற்று (1), (2)** இரண்டும் சரி

(B) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு

(C) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

(D) **கூற்று (1), (2)** இரண்டும் தவறு

28. பொதுமொழியைத் தேர்க.

(A) கண்ணன்

(B) படித்தான்

(C) வேங்கை

(D) மலர்

29. தீண்டாமைக்கு எதிராக நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியவர் :

(A) பாரதிதாசன்

(B) திரு.வி.க.

(C) அம்பேத்கர்

(D) பெரியார்

30. பாவலரேறுவால் பாடப்பட்டுத் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது ?

(A) நூறாசிரியம்

(B) மகபுகு வஞ்சி

(C) உலகியல் நூறு

(D) திருக்குறள் மெய்ப்பொருளுரை

## PART - B

31. Which combination of quarks makes up a proton ?

(A) uud

(B) udd

(C) uuu

(D) ddd

31. குவார்குகளின் எந்த சேர்க்கைகள் ஒரு புரோட்டானை உருவாக்குகிறது ?

(A) uud

(B) udd

(C) uuu

(D) ddd

32. Transducers uses the principle of :

(A) Pyroelectric effect

(B) Ferroelectric effect

(C) Antiferroelectric effect

(D) Piezo electric effect

32. ஆற்றல் மாற்றிகள் எந்த தத்துவத்தினைப் பயன்படுத்துகிறது ?

(A) பைரோ மின் விளைவு

(B) பெரோ மின் விளைவு

(C) எதிர்பெரோ மின் விளைவு

(D) பீசோ மின் விளைவு

33. Sometimes the arithmetic mean may be conveniently calculated by the following formula :

(A) $m = A + \frac{1}{N} \Sigma f \delta$

(B) $m = A - \frac{1}{N} \Sigma f \delta$

(C) $m = A + N \Sigma f \delta$

(D) $m = A - N \Sigma f \delta$

33. சில நேரங்களில் எண்கணித சராசரியை பின்வரும் சூத்திரத்தால் எளிமையாக கணக்கிடலாம்.

(A) $m = A + \frac{1}{N} \Sigma f \delta$

(B) $m = A - \frac{1}{N} \Sigma f \delta$

(C) $m = A + N \Sigma f \delta$

(D) $m = A - N \Sigma f \delta$

34. Identify the exact properties of Pauli matrices :

(i) $\sigma_+^2 = \sigma_-^2 = 0$

(ii) $\sigma_+ \sigma_- = 2(1 + \sigma_z)$

(iii) $\sigma_- \sigma_+ = (1 - \sigma_z)$

(A) (i) and (ii) only

(B) (i) and (iii) only

(C) (ii) and (iii) only

(D) (i), (ii) and (iii)

34. பௌலி அணிக்கோவைகளின் சரியான பண்புகளை கண்டறி.

(i) $\sigma_+^2 = \sigma_-^2 = 0$

(ii) $\sigma_+ \sigma_- = 2(1 + \sigma_z)$

(iii) $\sigma_- \sigma_+ = (1 - \sigma_z)$

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii)

35. Molecular diameter of nitrogen is $3.5 \times 10^{-10}$ m. At temperature of 27°C and at a pressure of one atmosphere [$p = 1.01 \times 10^5$ N/m$^2$], the mean free path of the molecule is :

(A) $0.76 \times 10^{-3}$ m

(B) $7.6 \times 10^{-3}$ m

(C) $0.76 \times 10^{-3}$ cm

(D) $7.6 \times 10^{-3}$ cm

35. 27°C வெப்பநிலை மற்றும் ஒரு வளிமண்டல அழுத்தத்தில் நைட்ரஜன் மூலக்கூறின் விட்டம் $3.5 \times 10^{-10}$ m. [$p = 1.01 \times 10^5$ N/m$^2$] ஆகும். மூலக்கூறின் சராசரி மோதலிடைத் தூரம் :

(A) $0.76 \times 10^{-3}$ m

(B) $7.6 \times 10^{-3}$ m

(C) $0.76 \times 10^{-3}$ cm

(D) $7.6 \times 10^{-3}$ cm

36. Four particles a, b, c and d are to be distributed in two halves of a box. The number of microstates corresponding to the macrostate (3, 1) is :

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

36. a, b, c மற்றும் d ஆகிய நான்கு துகள்கள் ஒரு பெட்டியின் இரண்டு பகுதிகளில் பகிரப்பட வேண்டும். (3, 1) என்ற பெரு நிலையோடு தொடர்புடைய நுண்நிலை-களின் எண்ணிக்கை ________ ஆகும்.

(A) 3 (B) 4

(C) 5 (D) 6

37. Electron - positron annihilation and the subsequent gamma ray production demonstrate the ________.

(A) Time dilation

(B) Lorentz transformation

(C) Mass invariance

(D) Mass - Energy relation

37. எலக்ட்ரான் - பாசிட்ரான் (electron - positron annihilation) அழிந்தொழிப்பின் விளைவாக பெறப்பட்ட காமா கதிர் வெளியீடு ________ விளைவை விளக்குகிறது.

(A) கால விரிப்பு

(B) லாரன்ட்ஸ் இயல்மாற்றம்

(C) நிறை மாறாமை

(D) நிறை-ஆற்றல் தொடர்பு

38. The internal conversion coefficient ($\alpha$) is very high, it indicates :

(A) A gamma ray emission is high

(B) Internal conversion dominates over gamma ray emission

(C) The nucleus is unstable

(D) The decay is forbidden

38. உள்மாற்றி குணகம் ($\alpha$) மிக அதிகம், இது குறிப்பிடுவதாவது :

(A) காமா கதிர் உமிழ்வு அதிகம்

(B) உள்மாற்றமானது, காமாகதிர் உமிழ்-வினை மேலாதிக்கம் செய்கிறது

(C) அணுக்கருவானது நிலையில்லாதது

(D) சிதைவானது தவிர்க்கப்படும்

39. Which of the following expression describes the thermal conductivity of solids based on kinetic theory ?

(A) $K = \frac{1}{3} NKT C_v$

(B) $K = \frac{1}{2} mV_F^2 C_v$

(C) $K = \frac{1}{2} \gamma\lambda C_v$

(D) $K = \frac{1}{3} \gamma\lambda C_v$

39. கீழ்க்கண்ட எந்த சமன்பாடு இயக்கக் கொள்கை அடிப்படையில் வருவிக்கப்-பட்ட வெப்பக்கடத்தும் திறனைக் குறிக்கிறது ?

(A) $K = \frac{1}{3} NKT C_v$

(B) $K = \frac{1}{2} mV_F^2 C_v$

(C) $K = \frac{1}{2} \gamma\lambda C_v$

(D) $K = \frac{1}{3} \gamma\lambda C_v$

40. In normal longitudinal Zeeman effect, both the sodium lines are found to be ________ polarised in opposite directions.

(A) plane (B) circularly

(C) elliptically (D) partially

40. சாதாரண நீளப்பாங்கான சீமன் விளைவில் (longitudinal Zeeman effect) இரண்டு சோடியம் வரிகளும் எதிரெதிர் திசைகளில் ________ தளவிளைவிற்கு உள்ளாகின்றன.

(A) சமதள (B) வட்ட

(C) நீள்வட்ட (D) பகுதி

41. The expression for the fine structure constant 'α' is given by ________.

(A) $\frac{e^2}{2\varepsilon_0 Ch}$ (B) $\frac{e^3}{2\varepsilon_0 Ch}$

(C) $\frac{e^2}{\varepsilon_0 Ch}$ (D) $\frac{e^3}{\varepsilon_0 Ch}$

41. நுண் அமைப்பு மாறிலி 'α'ன் கோவை ________ எனக் கொடுக்கப்படுகிறது.

(A) $\frac{e^2}{2\varepsilon_0 Ch}$ (B) $\frac{e^3}{2\varepsilon_0 Ch}$

(C) $\frac{e^2}{\varepsilon_0 Ch}$ (D) $\frac{e^3}{\varepsilon_0 Ch}$

42. Find out the correct statements on "Resolving time of Geiger-Muller Counter (T)" :

(i) To determine the true counting rate of a G-M counter, its resolving time (T) should be known.

(ii) The counter does not respond to ionizing events that occur during T.

(iii) During this time pulses are zero level recorded.

(A) (i) and (iii) only
(B) (i) and (ii) only
(C) (ii) and (iii) only
(D) (i) only

43. The element which has 3 electrons in the 'p' sub shell of 3rd orbit of its atom is ________.

(A) Vanadium
(B) Phosphorus
(C) Potassium
(D) Arsenic

44. On the basis of "Strangeness of elementary particles", find out the correct equation from those given below :

(A) $\pi^- + p \rightarrow \Lambda(\rightarrow n + \pi^0) + K^0(\rightarrow \pi^+\pi^-)$
(B) $\pi^- + p \rightarrow \Omega(\rightarrow n + \pi^-) + K^0(\rightarrow \pi^0\pi^+)$
(C) $\pi^- + p \rightarrow \Sigma^0(\rightarrow n + \pi^-) + \Sigma^-(\rightarrow \pi^0\pi^+)$
(D) $\pi^- + p \rightarrow \overset{0}{\Lambda}(\rightarrow n + \pi^0) + \Sigma^0(\rightarrow \pi^+\pi^-)$

42. கெய்கர்-முல்லர் எண்ணியின் பகுதிற நேரம் (T) பொருத்து சரியான கூற்றுகளை கண்டறிக.

(i) ஒரு G-M எண்ணியின் மெய் எண் விகிதம் கண்டறிய அதன் பகுதிற நேரம் (T) அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

(ii) T நேரத்தில் நிகழக்கூடிய அயனி-யாக்க நிகழ்வுகளுக்கு துலங்கல் செய்யாது.

(iii) இந்த நேரத்தில் துடிப்புகள் சுழி அளவில் பதிவாகும்.

(A) (i) மற்றும் (iii) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (i) மட்டும்

43. தன் அணுவின் 3-வது சுற்றுப்பாதையின் p-துணைக் கூட்டில் 3 எலக்ட்ரான்களைக் கொண்ட தனிமம் ________ ஆகும்.

(A) வனேடியம்
(B) பாஸ்பரஸ்
(C) பொட்டாசியம்
(D) ஆர்சனிக்

44. "அடிப்படை துகள்களின் விந்தை தன்மை-யை" அடிப்படையாக கொண்டு பின்வரு-வனவற்றுள் சரியான சமன்பாட்டினை கண்டறிக.

(A) $\pi^- + p \rightarrow \Lambda(\rightarrow n + \pi^0) + K^0(\rightarrow \pi^+\pi^-)$
(B) $\pi^- + p \rightarrow \Omega(\rightarrow n + \pi^-) + K^0(\rightarrow \pi^0\pi^+)$
(C) $\pi^- + p \rightarrow \Sigma^0(\rightarrow n + \pi^-) + \Sigma^-(\rightarrow \pi^0\pi^+)$
(D) $\pi^- + p \rightarrow \overset{0}{\Lambda}(\rightarrow n + \pi^0) + \Sigma^0(\rightarrow \pi^+\pi^-)$

45. Assertion (A) :

Mobility of the charge carrier can be determined experimentally by measuring Hall voltage, magnetic field and current.

Reason (R) :

These measurements help to calculate the Hall coefficient, which is used to find mobility when conductivity is known.

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A).

(B) Both (A) and (R) are true; but (R) is not the correct explanation of (A).

(C) (R) is true; (A) is false

(D) (R) is false; (A) is true

45. கூற்று (A) :

சோதனையின் மூலம் ஹால் மின்னழுத்த வேறுபாடு, காந்தபுலம் மற்றும் மின்னோட்டத்தினை அளப்பதன் மூலம் மின்னூட்ட ஊர்திகளின் இயக்கத்தினை கண்டறிய முடியும்.

காரணம் (R) :

இந்த அளவீடுகள் ஹால் குணகத்தினை கணக்கிட உதவுகிறது. மேலும் கடத்து திறன் தெரியும் பொழுது இவை இயக்கத்தினை கண்டறிய பயன்படுகிறது.

(A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி; (R) ஆனது (A) -கான சரியான விளக்கமாகும்

(B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி ஆனால் (R) ஆனது (A) - கான சரியான விளக்கமல்ல

(C) (R) சரி ; (A) தவறு

(D) (R) தவறு ; (A) சரி

46. The mass of the hydrogen molecule is $3.34 \times 10^{-27}$ kg. Boltzmann constant is $1.38 \times 10^{-23}$ $Jk^{-1}$. The r.m.s. Velocity of hydrogen at 27°C is :

(A) 1928 m/sec (B) 1574 m/sec

(C) 1754 m/sec (D) 1828 m/sec

46. ஹைட்ரஜன் மூலக்கூறின் நிறை $3.34 \times 10^{-27}$kg ஆகும். போல்ட்ஸ்மேன் மாறிலி $1.38 \times 10^{-23}$ $Jk^{-1}$ ஆகும். 27°C வெப்பநிலையில் ஹைட்ரஜன் மூலக்கூறின் சராசரி இருமடி மூலத்திசை வேகம் :

(A) 1928 m/sec (B) 1574 m/sec

(C) 1754 m/sec (D) 1828 m/sec

47. According to Drude-Lorentz Theory the electronic specific heat at constant volume per electron can be obtained as :

(A) $C_e = \frac{\pi^3 K^2 T}{2E_{Fo}}$

(B) $C_e = \frac{\pi^2 K^2 T}{2E_{Fo}}$

(C) $C_e = \frac{\pi^2 K^2 T^3}{2E_{Fo}}$

(D) $C_e = \frac{\pi^2 K^2 T^2}{2E_{Fo}}$

48. The value of $\log \frac{x + iy}{x - iy}$ is :

(A) $2\tan^{-1}\frac{y}{x}$

(B) $-2\tan^{-1}\frac{y}{x}$

(C) $2i\tan^{-1}\frac{y}{x}$

(D) $-2i\tan^{-1}\frac{y}{x}$

49. Which of the following equation is also called as Dulong-Petit's law ?

(A) $C_v = NK\left(\frac{T}{\theta_D}\right)^3$

(B) $C_v = NK\left(\frac{T^3}{\theta_D}\right)$

(C) $C_v = \left(\frac{dE}{dT}\right)_V$

(D) $C_v = \left(\frac{dT}{dE}\right)_V$

47. டிருட் - லாரன்ஸ் கொள்கைபடி பருமன் மாறாதிருக்கும் போது ஒரு எலக்ட்ரானின் மின்னணு தன்வெப்ப ஏற்புத்திறன் கீழ்க்கண்ட எச்சமன்பாடு குறிக்கிறது ?

(A) $C_e = \frac{\pi^3 K^2 T}{2E_{Fo}}$

(B) $C_e = \frac{\pi^2 K^2 T}{2E_{Fo}}$

(C) $C_e = \frac{\pi^2 K^2 T^3}{2E_{Fo}}$

(D) $C_e = \frac{\pi^2 K^2 T^2}{2E_{Fo}}$

48. $\log \frac{x + iy}{x - iy}$ -ன் மதிப்பு :

(A) $2\tan^{-1}\frac{y}{x}$

(B) $-2\tan^{-1}\frac{y}{x}$

(C) $2i\tan^{-1}\frac{y}{x}$

(D) $-2i\tan^{-1}\frac{y}{x}$

49. கீழ்க்காணும் எந்த சமன்பாடு டியுலாங் - பெடிட் விதி என அழைக்கப்படுகிறது ?

(A) $C_v = NK\left(\frac{T}{\theta_D}\right)^3$

(B) $C_v = NK\left(\frac{T^3}{\theta_D}\right)$

(C) $C_v = \left(\frac{dE}{dT}\right)_V$

(D) $C_v = \left(\frac{dT}{dE}\right)_V$

50. The sine transform of $e^{-x}$ is ________.

(A) $\frac{1}{1+n^2}$ (B) $\frac{1}{1-n^2}$

(C) $\frac{n}{1+n^2}$ (D) $\frac{n}{1-n^2}$

51. Which of the following statements, related to Vibrational Spectroscopy is/are correct ?

(i) The vibrational energy is zero at the lowest vibrational level.

(ii) Vibrational spectrum of a molecule is observed in the region $(50 - 4000)cm^{-1}$.

(iii) The intensity of a hot band increases as the temperature of the sample increases.

(A) (i) only
(B) (i) and (ii) only
(C) (i) and (iii) only
(D) (ii) and (iii) only

52. Calculate the wave number of $H_\alpha$ line in Balmer series of Hydrogen. (Given the value of Rydberg constant is, $R = 1.097 \times 10^7 m^{-1}$ )

(A) $1.524 \times 10^7 m^{-1}$
(B) $15.24 \times 10^7 m^{-1}$
(C) $152.4 \times 10^7 m^{-1}$
(D) $0.1524 \times 10^7 m^{-1}$

50. $e^{-x}$ -க்கான நெடுக்கை உருமாற்றம் (sine transform) ________.

(A) $\frac{1}{1+n^2}$ (B) $\frac{1}{1-n^2}$

(C) $\frac{n}{1+n^2}$ (D) $\frac{n}{1-n^2}$

51. அதிர்வு நிறமாலையியலுக்குத் தொடர் - புடைய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானது ?

(i) தாழ்நிலை அதிர்வு நிலையின் அதிர்வு ஆற்றல் சுழியாகும்.

(ii) ஒரு மூலக்கூறின் அதிர்வு நிறமாலை $(50 - 4000)cm^{-1}$ பகுதியில் கண்டறியப் படுகிறது.

(iii) ஒரு வெப்பப் பட்டையின் செறிவு மாதிரிக்கூறின் வெப்பநிலை அதிகரிக்கும் போது அதிகரிக்கிறது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (i) மற்றும் (iii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்

52. ஹைட்ரஜனின் பாமர் தொடரில் $H_\alpha$ வரியின் அலை எண்ணைக் கணக்கிடு (ரிட்பெர்க் மாறிலி R -ன் மதிப்பு, $R = 1.097 \times 10^7 m^{-1}$ எனக் கொடுக்கப் பட்டுள்ளது)

(A) $1.524 \times 10^7 m^{-1}$
(B) $15.24 \times 10^7 m^{-1}$
(C) $152.4 \times 10^7 m^{-1}$
(D) $0.1524 \times 10^7 m^{-1}$

53. Suppose the negative voltage feedback is applied to the circuit. What happens to the gain of the amplifier ?

(A) Increased

(B) Decreased

(C) No change

(D) Depends on the amplifier

54. According to "Error in Raised to a power" Let $Z = a^p b^q / c^r$. If the measured values of a, b and c are $(a \pm \Delta a)$, $(b \pm \Delta b)$ and $(c \pm \Delta c)$ then maximum error is ________.

(A) $\frac{\Delta z}{z} = p\left(\frac{\Delta a}{a}\right) + q\left(\frac{\Delta b}{b}\right) + r\left(\frac{\Delta c}{c}\right)$

(B) $\frac{\Delta z}{z} = p(\Delta a.a) + q(\Delta b.b) + r(\Delta c.c)$

(C) $\frac{\Delta z}{z} = p(\Delta a + a) + q(\Delta b + b) + r(\Delta c + c)$

(D) $\frac{\Delta z}{z} = p(\Delta a - a) + q(\Delta b - b) + r(\Delta c - c)$

55. The Eigen value equation is :

(A) $F_{op}\psi = f\psi$

(B) $F\psi(x) = f_{op}$

(C) $f\, d\psi = F\psi(x)$

(D) $F'_{(op)} = \psi$

53. எதிர் பின்னூட்ட மின்னழுத்தமானது ஒரு மின்சுற்றில் கொடுக்கப்படும் போது அந்த பெருக்கியின் பெருக்கம் எவ்வாறு இருக்கும் ?

(A) அதிகமாகும்

(B) குறையும்

(C) எந்த மாற்றமும் இருக்காது

(D) பெருக்கியை பொருத்து

54. ''அடுக்கு ஏற்றத்தில் பிழை'' ஐ குறித்து $Z = a^p b^q / c^r$ எனக்கொள்க. அளவீட்டு மதிப்புகளான a, b மற்றும் c ஆனது $(a \pm \Delta a)$, $(b \pm \Delta b)$ மற்றும் $(c \pm \Delta c)$ மேலும் பெரும பிழையானது ________.

(A) $\frac{\Delta z}{z} = p\left(\frac{\Delta a}{a}\right) + q\left(\frac{\Delta b}{b}\right) + r\left(\frac{\Delta c}{c}\right)$

(B) $\frac{\Delta z}{z} = p(\Delta a.a) + q(\Delta b.b) + r(\Delta c.c)$

(C) $\frac{\Delta z}{z} = p(\Delta a + a) + q(\Delta b + b) + r(\Delta c + c)$

(D) $\frac{\Delta z}{z} = p(\Delta a - a) + q(\Delta b - b) + r(\Delta c - c)$

55. ஐகன் மதிப்பு சமன்பாடானது :

(A) $F_{op}\psi = f\psi$

(B) $F\psi(x) = f_{op}$

(C) $f\, d\psi = F\psi(x)$

(D) $F'_{(op)} = \psi$

56. The work done in an adiabatic process depends upon :

(A) the initial and final temperatures only

(B) the initial and final volumes only

(C) the initial and final pressures only

(D) the initial volume and initial pressure only

56. மாறா வெப்பச் செயல்முறையில் செய்யப்பட்ட வேலை கீழ்கண்டவற்றில் எதை சார்ந்திருக்கிறது ?

(A) ஆரம்ப மற்றும் இறுதி வெப்பநிலைகள் மட்டுமே

(B) ஆரம்ப மற்றும் இறுதி பருமன்கள் மட்டுமே

(C) ஆரம்ப மற்றும் இறுதி அழுத்தங்கள் மட்டுமே

(D) ஆரம்ப நிலை பருமன் மற்றும் ஆரம்ப நிலை அழுத்தம் மட்டுமே

57. Applying Gauss's Law find out how the electric field (E) from an infinite plane which carries Uniform surface charge '$\sigma$' is equated. Area of the plane is A :

(A) $2A|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A$

(B) $2A^2|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A$

(C) $2A|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A^2$

(D) $2A^2|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A^2$

57. முடிவிலா சமதள பரப்பு ஒன்று சம அளவிலான மேற்பரப்பு மின்னூட்டம் ($\sigma$) கொண்டுள்ளபோது, உருவாகும் மின்புலம் (E) உடன் எவ்வாறு தொடர்புபடுத்த முடியும். காஸ் (Gauss's Law) விதியை பயன்படுத்தி கண்டுபிடிக்கவும். சமதள பரப்பின் பரப்பளவு A.

(A) $2A|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A$

(B) $2A^2|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A$

(C) $2A|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A^2$

(D) $2A^2|E| = \frac{1}{\varepsilon_0}\sigma A^2$

58. On the basis of the 'Nuclear reactor' which of the following is **wrongly** matched ?

| | | | |
|---|---|---|---|
| (i) | U-235 | - | Common nuclear fuel used in reactors |
| (ii) | Moderator | - | Absorbs excess neutrons |
| (iii) | Neutron reflector | - | To prevent the neutrons from escaping from the core |
| (iv) | Cooling system | - | Transport the generated heat to heat engine |

(A) (i) and (ii) only
(B) (ii) and (iii) only
(C) (iv) only
(D) (ii) only

59. The discrete energy values of the particle inside the one dimensional box is :

(A) $E_n = \frac{n^2h^2}{8\,mL^2}$

(B) $E_n = \frac{n^2L^2}{8\,mh^2}$

(C) $E_n = \frac{2n^2h^2}{8\,mL^2}$

(D) $\frac{n^2L^2}{2\,mL^2}$

58. அணுக்கரு உலையை அடிப்படையாக கொண்டு பின்வருனவற்றுள் தவறாக பொருந்தியுள்ளதை தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| (i) | U-235 | - | அணுக்கரு உலையில் பயன்படுத்தப்படும் பொதுவான எரிபொருள் |
| (ii) | தணிப்பான்கள் | - | மீதமுள்ள நியூட்ரான்களை உட்கவருதல் |
| (iii) | நியூட்ரான் எதிரொளிப்-பான்கள் | - | மையப்பகுதியிலிருந்து நியூட்ரான்கள் வெளியேறுவதை தடுக்கிறது |
| (iv) | குளிர்விப்பான் அமைப்பு | - | தோற்றுவிக்கப்பட்ட வெப்பத்தை, வெப்பவிசைப் பொறிக்கு மாற்றுகிறது |

(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (ii) மற்றும் (iii) மட்டும்
(C) (iv) மட்டும்
(D) (ii) மட்டும்

59. ஒரு பரிமாண பெட்டியினுள் உள்ள துகளின் தொடர்ச்சியற்ற ஆற்றல் மதிப்பானது :

(A) $E_n = \frac{n^2h^2}{8\,mL^2}$

(B) $E_n = \frac{n^2L^2}{8\,mh^2}$

(C) $E_n = \frac{2n^2h^2}{8\,mL^2}$

(D) $\frac{n^2L^2}{2\,mL^2}$

60. Find the value of $\Gamma\frac{1}{2}$ :

(A) $\pi$ (B) $-\pi$

(C) $\sqrt{\pi}$ (D) $-\sqrt{\pi}$

61. The Legendre's differential equation is of the form :

(A) $(1+x^2)\frac{d^2y}{dx^2}+2x\frac{dy}{dx}+n(n+1)y=0$

(B) $(1-x^2)\frac{d^2y}{dx^2}-2x\frac{dy}{dx}+n(n+1)y=0$

(C) $(1-x^2)\frac{d^2y}{dx^2}+2x\frac{dy}{dx}-n(n+1)y=0$

(D) $(1-x^2)\frac{d^2y}{dx^2}-2x\frac{dy}{dx}-n(n+1)y=0$

62. The expression of the linear momentum (P) is conserved :

(A) $\frac{dL}{dt}\neq 0$ (B) $\frac{dL}{dt}=0$

(C) $\frac{dP}{dt}\neq 0$ (D) $\frac{dP}{dt}=0$

63. The angular momentum of the electron revolving around the nucleus in the permissible orbits is an integral multiple of ________.

(A) $\frac{h}{2\pi}$ (B) $\frac{\hbar}{2\pi}$

(C) $\frac{h}{3\pi}$ (D) $\frac{\hbar}{3\pi}$

60. $\Gamma\frac{1}{2}$-ன் மதிப்பைக் காண் :

(A) $\pi$ (B) $-\pi$

(C) $\sqrt{\pi}$ (D) $-\sqrt{\pi}$

61. லெஜண்டரின் வகைக்கெழு சமன்பாட்டு வடிவம் :

(A) $(1+x^2)\frac{d^2y}{dx^2}+2x\frac{dy}{dx}+n(n+1)y=0$

(B) $(1-x^2)\frac{d^2y}{dx^2}-2x\frac{dy}{dx}+n(n+1)y=0$

(C) $(1-x^2)\frac{d^2y}{dx^2}+2x\frac{dy}{dx}-n(n+1)y=0$

(D) $(1-x^2)\frac{d^2y}{dx^2}-2x\frac{dy}{dx}-n(n+1)y=0$

62. நேர்க்கோட்டு உந்த (P) அழிவின்மைக்கான கோவை :

(A) $\frac{dL}{dt}\neq 0$ (B) $\frac{dL}{dt}=0$

(C) $\frac{dP}{dt}\neq 0$ (D) $\frac{dP}{dt}=0$

63. அனுமதிக்கப்பட்ட சுற்றுப் பாதைகளில் அணுக்கருவைச் சுற்றிவரும் எலக்ட்ரா-னின் கோண உந்தம் ________ ன் முழு எண் மடங்காகும்.

(A) $\frac{h}{2\pi}$ (B) $\frac{\hbar}{2\pi}$

(C) $\frac{h}{3\pi}$ (D) $\frac{\hbar}{3\pi}$

64. **Assertion (A) :**

Millikan used X-rays to charge the oil drop.

**Reason (R) :**

X-rays ionize air molecules, allowing electrons to attach with oil drops.

(A) Both **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**

(B) Both **(A)** and **(R)** are true but **(R)** is not the correct explanation of **(A)**

(C) **(A)** is true **(R)** is false

(D) **(R)** is true **(A)** is false

65. What does the intercept on the frequency axis represent in Millikan's graph ?

(A) Planck's constant

(B) Stopping potential

(C) Threshold frequency

(D) Kinetic energy

66. Critical temperature of $Nb_3Sn$ is :

(A) 17 K

(B) 16.5 K

(C) 18.5 K

(D) 16 K

64. **கூற்று (A) :**

மில்லிகன் X-கதிர்களை பயன்படுத்தி எண்ணெய் துளியை மின்னூட்டம் அடைய செய்தார்.

**காரணம் (R) :**

X-கதிர்கள் காற்று மூலக் கூறுகளை அயனியாக்கி, எண்ணெய் துளிகளுடன் எலக்ட்ரான்களை இணைக்க அனுமதிக்கிறது.

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டுமே சரி மேலும் **(R)** ஆனது **(A)**கான சரியான விளக்கம்

(B) **(A)**மற்றும் **(R)** இரண்டுமே சரி ஆனால் **(R)** ஆனது **(A)**கான சரியான விளக்கமல்ல

(C) **(A)** சரி; **(R)** தவறு

(D) **(R)** சரி; **(A)** தவறு

65. மில்லிகனின் வரைபடத்தில், அதிர்வெண் அச்சில் உள்ள குறுக்கீட்டு நிலை எதை குறிக்கிறது?

(A) பிளாங் மாறிலி

(B) நிறுத்து மின்னழுத்தம்

(C) பயன்தொடக்க அதிர்வெண்

(D) இயக்க ஆற்றல்

66. $Nb_3Sn$ என்ற மீக்கடத்தியின் மாறுநிலை வெப்பநிலை :

(A) 17 K

(B) 16.5 K

(C) 18.5 K

(D) 16 K

67. Identify the outstanding discoveries made with the cloud chamber :

(i) The discovery of positron

(ii) $K^0 \rightarrow \pi^+ + \pi^-$

(iii) $\Lambda^0 \rightarrow p^+ + \pi^-$

(iv) The discovery of neutrino and antineutrino

(A) (i), (ii) and (iv) only

(B) (i), (ii) and (iii) only

(C) (i), (iii) and (iv) only

(D) (i), (iv) only

68. Which principle governs the equation state of a system of identical fermions ?

(A) Bose-Einstein condensation

(B) Pauli's Exclusion principle

(C) Maxwell-Boltzmann distribution

(D) Ehrenfest theorem

69. **Assertion (A) :**

A quenching gas is used in the Geiger-Muller tube.

**Reason (R) :**

Quenching gas helps in absorbing the ultraviolet photons produced during ionization, preventing continuous discharge.

(A) Both **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**

(B) Both **(A)** and **(R)** are true but **(R)** is not the correct explanation of **(A)**

(C) **(A)** is true but **(R)** is false

(D) **(A)** is false but **(R)** is true

67. முகில் கலனால் உண்டான சிறப்பான கண்டுபிடிப்புகளை கண்டறிக :

(i) பாசிட்ரானை கண்டறிதல்

(ii) $K^0 \rightarrow \pi^+ + \pi^-$

(iii) $\Lambda^0 \rightarrow p^+ + \pi^-$

(iv) நியூட்ரினோ மற்றும் எதிர் நியூட்ரினோவை கண்டறிதல்

(A) (i), (ii) மற்றும் (iv) மட்டும்

(B) (i), (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (iii) மற்றும் (iv) மட்டும்

(D) (i), (iv) மட்டும்

68. ஒத்த ஃபெர்மியான்களின் சரிஒப்பு-நிலையை வழிநடத்தும் கோட்பாடு எது?

(A) போஸ் - ஐன்ஸ்டின் சுருக்கம்

(B) பௌலியின் தவிர்க்கை தத்துவம்

(C) மேக்ஸ்வெல் - போல்ட்ஸ்மென் பங்கீடு

(D) ஏரென்பெஸ்ட் கொள்கை

69. **கூற்று (A) :**

தணிக்கும் வாயுவானது Geiger-Muller குழாயில் பயன்படுத்தப்படுகிறது.

**காரணம் (R) :**

தணிக்கும் வாயுவானது. அயனியாக்க நேரத்தில் தோற்றுவிக்கப்பட்ட புறஊதா ஃபோட்டான்களை உட்கவர்ந்து தொடர் மின்னிறக்கத்தினை தடுக்கிறது.

(A) **(A)** மற்றும் **(R)** இரண்டுமே சரி மேலும் **(R)** ஆனது **(A)** -கான சரியான விளக்கமாகும்

(B) **(A)** மற்றும் **(R)** இரண்டுமே சரி ஆனால் **(R)** ஆனது **(A)** -கான சரியான விளக்கமல்ல

(C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு

(D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி

70. The Lagrangian function (L) of a system is given by :

(A) $L = 2T - V$

(B) $L = T + V$

(C) $L = T - V$

(D) $L = 2T + V$

71. Find the differential equation corresponding to $y = ae^{3x} + be^{x}$ :

(A) $\frac{d^2y}{dx^2} + 4\frac{dy}{dx} + 3y = 0$

(B) $\frac{d^2y}{dx^2} + 4\frac{dy}{dx} - 3y = 0$

(C) $\frac{d^2y}{dx^2} - 4\frac{dy}{dx} - 3y = 0$

(D) $\frac{d^2y}{dx^2} - 4\frac{dy}{dx} + 3y = 0$

72. If $x = \cos\theta + i\sin\theta$ and $y = \cos\phi + i\sin\phi$, then

$\frac{x-y}{x+y} =$

(A) $\tan\theta\left[\frac{\theta+\phi}{2}\right]$

(B) $\tan\theta\left[\frac{\theta-\phi}{2}\right]$

(C) $i\tan\theta\left[\frac{\theta+\phi}{2}\right]$

(D) $i\tan\theta\left[\frac{\theta-\phi}{2}\right]$

70. அமைப்பு ஒன்றின் லக்ராஞ்சியன் சார்பு (L) கொடுக்கப்பட்டுள்ளது :

(A) $L = 2T - V$

(B) $L = T + V$

(C) $L = T - V$

(D) $L = 2T + V$

71. $y = ae^{3x} + be^{x}$ என்ற சமன்பாட்டிற்கு இணையான வகைக்கெழு சமன்பாட்டைக் காண்.

(A) $\frac{d^2y}{dx^2} + 4\frac{dy}{dx} + 3y = 0$

(B) $\frac{d^2y}{dx^2} + 4\frac{dy}{dx} - 3y = 0$

(C) $\frac{d^2y}{dx^2} - 4\frac{dy}{dx} - 3y = 0$

(D) $\frac{d^2y}{dx^2} - 4\frac{dy}{dx} + 3y = 0$

72. $x = \cos\theta + i\sin\theta$ மற்றும் $y = \cos\phi + i\sin\phi$ என்றால், $\frac{x-y}{x+y} =$

(A) $\tan\theta\left[\frac{\theta+\phi}{2}\right]$

(B) $\tan\theta\left[\frac{\theta-\phi}{2}\right]$

(C) $i\tan\theta\left[\frac{\theta+\phi}{2}\right]$

(D) $i\tan\theta\left[\frac{\theta-\phi}{2}\right]$

73. The value of $\sum_{n=1}^{\infty} \frac{1}{n^2}$ using Fourier series is ________.

(A) $\frac{\pi^2}{2}$ (B) $\frac{\pi^2}{4}$

(C) $\frac{\pi^2}{6}$ (D) $\frac{\pi^2}{8}$

73. பூரியரின் தொடரைக் கொண்டு $\sum_{n=1}^{\infty} \frac{1}{n^2}$ -ன் மதிப்பானது ________ ஆகும்.

(A) $\frac{\pi^2}{2}$ (B) $\frac{\pi^2}{4}$

(C) $\frac{\pi^2}{6}$ (D) $\frac{\pi^2}{8}$

74. Which of the following statements are true about the explosion of atom bomb ?

(i) Enormous amount of energy release during the atom bomb explosion is the consequence of change of mass into energy.

(ii) In an atom bomb, nucleus of heavy atom breaks into multiple parts.

(iii) The total rest mass of the broken parts of the atom is same as that of its original mass.

**Answer choices :**

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iii) only

74. பின்வருவனவற்றுள், அணுகுண்டு வெடிப்பு பற்றிய சரியான கூற்றுகளை தேர்ந்தெடு.

(i) அணுகுண்டு வெடிப்பின் போது வெளிவரும் அதிகப்படியான ஆற்றல், நிறை, ஆற்றலாக மாறுவதன் விளைவு ஆகும்.

(ii) அணுகுண்டு வெடிப்பில், கனரக அணுக்கரு பல பகுதிகளாக உடைகிறது.

(iii) உடைந்த அணுவின் பகுதிகளின் மொத்த ஓய்வு நிறை, அணுவின் உண்மையான நிறைக்கு சமமாகும்.

**பதில் தெரிவுகள் :**

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

75. What is the sequence of reactions in a typical two-stage hydrogen bomb ?

(A) Fusion → Fission

(B) Fission → Fusion

(C) Fission → Chain reaction → Decay

(D) Fusion → Decay → Chain reaction

75. ஒரு பொதுவான இரண்டு கட்ட ஹைட்ரஜன் அணுகுண்டின் வினைகளின் தொடர் யாது ?

(A) இணைவு → பிளவு

(B) பிளவு → இணைவு

(C) பிளவு → சங்கிலி வினை → சிதைவு

(D) இணைவு → சிதைவு → சங்கிலி வினை

76. Which one of the following property prevents the FET from its thermal breakdown ?

(A) Positive temperature coefficient at high temperature

(B) Negative temperature coefficient at high voltage

(C) Negative temperature coefficient at high current

(D) Negative temperature coefficient at high temperature

76. கீழ்கண்ட எந்த பண்பு புலவிளைவு டிரான்ஸ்சிடரின் வெப்ப முறிவிலிருந்து தடுக்கிறது என்று குறிப்பிடுக ?

(A) அதிக வெப்பநிலையில் நேர் வெப்ப குணக எண்

(B) அதிக மின்னழுத்தத்தில் எதிர் வெப்ப குணக எண்

(C) அதிக மின்னோட்டத்தில் எதிர் வெப்ப குணக எண்

(D) அதிக வெப்பநிலையில் எதிர் வெப்ப குணக எண்

77. According to the time independent Schodinger equation, the differential operator H is ________.

(A) $H = -\left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + V$

(B) $H = \left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + V$

(C) $H = -\left(\frac{\hbar^2}{2p}\right)\nabla^2 + E$

(D) $H = -\left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + P$

77. காலம் சாரா ஸ்சோடிஞ்சர் சமன்பாட்டின்படி, வகைகெழு செயலி H ஆனது ________.

(A) $H = -\left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + V$

(B) $H = \left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + V$

(C) $H = -\left(\frac{\hbar^2}{2p}\right)\nabla^2 + E$

(D) $H = -\left(\frac{\hbar^2}{2m}\right)\nabla^2 + P$

78. The limitations on the motion of a system are called :

(A) Degrees of freedom

(B) Constraints

(C) Linear momentum

(D) Angular momentum

78. அமைப்பு ஒன்றின் இயக்கத்திற்கான வரம்புகள் இவ்வாறு அழைக்கப்படுவது :

(A) கட்டின்மை படிகள்

(B) தடைகள்

(C) நேர்க்கோட்டு உந்தம்

(D) கோண உந்தம்

79. In Junction diode, the reverse saturation current is produced, due to :

(A) Minority carriers

(B) Majority carriers

(C) High resistance

(D) Low resistance

79. சந்தி-டையோடில் பின்னோக்கு தெவிட்டிய மின்னோட்டம் கீழ்க்கண்ட எதனால் உருவாகிறது ?

(A) சிறுபான்மை மின்னூட்ட தாங்கிகள்

(B) பெரும்பான்மை மின்னூட்ட தாங்கிகள்

(C) அதிக மின்தடை

(D) குறைந்த மின்தடை

80. The solution of the radial equation of Hydrogen atom has the complete agreement with ________.

(A) Coulomb Theory

(B) Bohr Theory

(C) Wave Theory

(D) Huygen's Theory

80. ஹைட்ரஜன் அணுவின் ஆர சமன்பாட்டின் தீர்வானது ________ உடன் முழு ஒப்பந்தத்தை பெற்றுள்ளது.

(A) கூலும் கொள்கை

(B) போர் கொள்கை

(C) அலை கொள்கை

(D) ஹையஜென்ஸ்ன் கொள்கை

81. If one dimensional Laplace equation is $\frac{d^2v}{dx^2} = 0$ then the two dimensional Laplace equation is written as :

(A) $\frac{d^2v}{dx^2} + \frac{d^2v}{dy^2} = 0$

(B) $\frac{d^2v}{dx^2} - \frac{d^2v}{dy^2} = 0$

(C) $\frac{\partial^2v}{\partial x^2} + \frac{\partial^2v}{\partial y^2} = 0$

(D) $\frac{\partial^2v}{\partial x^2} - \frac{\partial^2v}{\partial y^2} = 0$

81. ஒரு பரிமாண லாப்லாஸ் (Laplace) சமன்பாடு $\frac{d^2v}{dx^2} = 0$ எனில், இரு பரிமாண லாப்லாஸ் (Laplace) சமன்பாடாக கருதப்படுவது :

(A) $\frac{d^2v}{dx^2} + \frac{d^2v}{dy^2} = 0$

(B) $\frac{d^2v}{dx^2} - \frac{d^2v}{dy^2} = 0$

(C) $\frac{\partial^2v}{\partial x^2} + \frac{\partial^2v}{\partial y^2} = 0$

(D) $\frac{\partial^2v}{\partial x^2} - \frac{\partial^2v}{\partial y^2} = 0$

82. **Assertion (A) and Reason (R) type of question :**

**Assertion (A) :**

Pulse of light spreads out as a growing sphere. Thus, an observer fixed in the origin of light pulse will see a spreading of spherical wave front propagation.

**Reason (R) :**

Speed of light varies for the source and the observer who is moving with respect to the source.

**Choice of answers :**

(A) Both **Assertion (A)** and **Reason (R)** are true, and **(R)** is the correct explanation for **(A)**

(B) Both **Assertion (A)** and **Reason (R)** are true, but **(R)** is not the correct explanation for **(A)**

(C) **Assertion (A) is true, Reason (R) is false**

(D) **Assertion (A) is false, Reason (R) is true**

82. **கூற்று (A) மற்றும் காரணம் (R) வகை கேள்வி :**

**கூற்று (A) :**

ஒளி துடிப்பு வளரும் கோளமாக பரவுகிறது. ஒளித் துடிப்பின் மூலத்தில் நிலைத்துள்ள நோக்காளர், கோள அலை-முகப்பு பரவலின் விரிவாக்கத்தை காண்பார்.

**காரணம் (R) :**

ஒளிமூலத்தை பொறுத்து நகரும் நோக்காளருக்கும், ஒளி மூலத்திற்கும், ஒளி திசைவேகம் மாறுபடுகிறது.

**பதில் தேர்வுகள் :**

(A) **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டுமே சரி, **(R), (A)** வுக்கான சரியான விளக்கம்

(B) **கூற்று (A)** மற்றும் **காரணம் (R)** இரண்டுமே சரி, **(R), (A)** வுக்கான சரியான விளக்கமல்ல

(C) **கூற்று (A) சரி, காரணம் (R) தவறு**

(D) **கூற்று (A) தவறு, காரணம் (R) சரி**

83. Which of the following is not analytic function of complex variable $z = x + iy$ ?

(A) $|z|$ (B) $z^{-1}$

(C) sinz (D) $e^{\sin z}$

83. பின்வருவனவற்றில் எது சிக்கலெண் மாறி $z = x + iy$ -இன் பகுபடல் சார்பு அல்ல ?

(A) $|z|$ (B) $z^{-1}$

(C) sinz (D) $e^{\sin z}$

84. The rolling disc is an example of the following one :

(A) Holonomic Constraint

(B) Generalized Coordinates

(C) Cartesian Coordinates

(D) Non-holonomic Constraint

84. பின்வருவன ஒன்றிற்கு உருளும் வட்டானது எடுத்துக்காட்டு :

(A) ஹோலோனாமிக் தடை

(B) பொதுமைய ஆயத்தொலைவுகள்

(C) கார்டீசியன் ஆயத்தொலைவுகள்

(D) ஹோலோனாமிக் இல்லாத தடை

85. Corresponding to Dirac equations choose the correct answer :

(i) Dirac equation is a physically acceptable relativistic equation

(ii) The probability current density (J) together with the probability density (ρ) obeys the continuity equation

(iii) It predicts existence of photons

(A) (i) and (iii) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (iii) only

85. டிராக் சமன்பாடுகளை பொருத்து சரியான விடையை தெரிவு செய்க.

(i) டிராக் சமன்பாடானது இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சார்பியல் சமன்பாடு ஆகும்

(ii) நிகழ்தகவு அடர்த்தி (ρ)வுடன் நிகழ்தகவு மின்னடர்த்தி (J)வானது இணைந்து தொடர் சமன்பாட்டை பின்பற்றியுள்ளது

(iii) ∴போட்டான்களின் இருப்பினை முன்மதிப்பிட்டுரைக்கிறது

(A) (i) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (iii) மட்டும்

86. Identify the correct quantum operator for the classical definition of $\frac{P^2}{2m}$ :

(A) $-i\frac{h}{2\pi}\nabla$

(B) $-\left(\frac{h^2}{8\pi^2 m}\right)\nabla^2$

(C) $-i\frac{h}{2\pi}r \times \nabla$

(D) $-\left(\frac{h^2}{2\pi^2 m}\right)\times\nabla$

86. முதுபழங்வரைவியான $\frac{P^2}{2m}$ க்கு பொருத்தமான குவாண்டம் செயலியை கண்டறி.

(A) $-i\frac{h}{2\pi}\nabla$

(B) $-\left(\frac{h^2}{8\pi^2 m}\right)\nabla^2$

(C) $-i\frac{h}{2\pi}r \times \nabla$

(D) $-\left(\frac{h^2}{2\pi^2 m}\right)\times\nabla$

87. The efficiency of the Carnot's engine working between the steam point and ice point is :

(A) 33.88% (B) 31.28%

(C) 28.61% (D) 26.81%

87. நீராவி புள்ளிக்கும் பனிகட்டி புள்ளிக்கும் இடையே செயல்படும் கார்னோ இயந்திரத்தின் பயனுறுதிறனானது :

(A) 33.88% (B) 31.28%

(C) 28.61% (D) 26.81%

88. Which one of the following statements is/are wrong regarding entropy ?

(i) entropy remains constant in adiabatic process

(ii) in every natural process, there is always an increase in entropy

(iii) due to increase in entropy, the unavailable energy decreases

(iv) in isothermal process there is a change in entropy

(A) (ii) and (iv) only

(B) (ii) only

(C) (i) and (iii) only

(D) (iii) only

88. பின்வரும் கூற்றுகளில் எது/எவைகள் என்ட்ராபியை பற்றிய தவறானதாகும் ?

(i) வெப்பமாறா நிகழ்வில் என்ட்ராபி மாறாமல் இருக்கிறது

(ii) ஒவ்வொரு இயற்கை நிகழ்விலும், என்ட்ராபி எப்போதும் அதிகரிக்கிறது

(iii) என்ட்ராபி அதிகரிப்பதனால், கிடைக்கப்பெறாத ஆற்றல் குறைகிறது

(iv) மாறா வெப்பநிலை நிகழ்வில், என்ட்ராபியில் மாற்றம் ஏற்படுகிறது

(A) (ii) மற்றும் (iv) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (iii) மட்டும்

89. One of the rules that is followed in the distribution of electrons in various shells states that, "The last but one" main shell cannot contain more than __________ electrons.

(A) 6 (B) 18

(C) 8 (D) 10

89. பல்வேறு கூடுகளில் எலக்ட்ரான்கள் பகிர்தலில் கடைபிடிக்கப்படும் விதிகளில் ஒன்று, ''கடைசி கூட்டிற்கு முந்தைய'' முதன்மைக் கூடு __________ எலக்ட்ரான்களுக்கு மேல் உள்ளடக்கி இருக்காது என்று கூறுகிறது.

(A) 6 (B) 18

(C) 8 (D) 10

90. Assertion (A) :

According to Gamow's theory, the decay constant also depends on the energy of the α-particles.

Reason (R) :

Higher energy α-particles have a greater probability of tunnelling through the barrier.

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(B) Both (A) and (R) are true but (R) is not the correct explanation of (A)

(C) (A) is true but (R) is false

(D) (A) is false but (R) is true

90. கூற்று (A) :

காமௌவ் கொள்கைபடி, சிதைவு மாறிலியானது, α-துகள்களின் ஆற்றலையும் சார்ந்துள்ளது.

காரணம் (R) :

அதிக ஆற்றல் கொண்ட α-துகள்கள் தடையை குடையும் பெரும் நிகழ் தகவினை கொண்டுள்ளது.

(A) (A) மற்றும் (R) இரண்டுமே சரி மற்றும் (R) ஆனது (A) கான சரியான விளக்கம்

(B) (A) மற்றும் (R) இரண்டுமே சரி ஆனால் (R) ஆனது (A) கான சரியான விளக்கம் அல்ல

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

91. The angular frequency in the presence of magnetic induction B called the Larmor frequency ($\omega_L$) is :

(A) $\frac{eB}{4\pi m}$ (B) $\frac{eh}{2m}$

(C) $\frac{eB}{2m}$ (D) $\frac{eB}{4m}$

91. காந்தத்தூண்டல் (B) உள்ளபோது ஏற்படும் கோண அதிர்வெண் லார்மர் அதிர்வெண் ($\omega_L$) எனப்படுகிறது. அதற்கான சமன்பாடு :

(A) $\frac{eB}{4\pi m}$ (B) $\frac{eh}{2m}$

(C) $\frac{eB}{2m}$ (D) $\frac{eB}{4m}$

92. Which of the following radiations is least likely to be detected efficiently by a Standard Geiger-Muller Counter ?

(A) Alpha particles

(B) Beta particles

(C) X-rays

(D) Neutrons

92. தரமான கெய்கர்-முல்லர் எண்ணி, கீழ்கண்ட எந்த கதிர்வீச்சை சிறிய அளவில் திறம்பட கண்டறியும்?

(A) ஆல்ஃபா துகள்கள்

(B) பீட்டா துகள்கள்

(C) X-கதிர்கள்

(D) நியூட்ரான்கள்

93. Which one of the following principle is used in equation of continuity ?
(A) Conservation of momentum
(B) Conservation of energy
(C) Conservation of charge
(D) Conservation of current

94. Choose the correct statements regarding time independent Perturbation theory :

(i) It is suitable for determining the discrete energy levels of any stationary state problem.
(ii) This theory is also known 'Rayleigh - Schrodinger' perturbation theory.
(iii) The Hamiltonian contains time dependent part.
(A) (i) and (ii) only
(B) (i) and (iii) only
(C) (ii) and (iii) only
(D) (iii) only

95. The relation between the radiated light and the forward current of LED is _______.

(A) The intensity of radiated light is inversely proportional to the forward current of LED.
(B) The intensity of radiated light is directly proportional to the forward current of LED.
(C) The intensity of radiated light is equal to the forward current of LED.
(D) The intensity of radiated light is not equal to the forward current of LED.

93. கீழ்கண்ட கொள்கைகளில் எது தொடர்ச்சி சமன்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது?
(A) உந்தம் அழிவின்மை
(B) ஆற்றல் அழிவின்மை
(C) மின்னூட்ட அழிவின்மை
(D) மின்னோட்ட அழிவின்மை

94. காலம்சாரா கலக்க கோட்பாட்டின் (time independent Perturbation theory) படி சரியான கூற்றுகளை தெரிவு செய்க.
(i) எந்தவொரு நிலைமாறா கணக்கீட்டின் தனித்தனியான ஆற்றல் நிலைகளை கண்டறிய முடியும்
(ii) இக்கோட்பாடு 'ராலே - சோடிஞ்சர்' கோட்பாடு எனவும் வழங்கப்-படுகிறது.
(iii) காலம் சார்ந்த பகுதிகளை ஹேமில்டோனின் பெற்றுள்ளது
(A) (i) மற்றும் (ii) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (iii) மட்டும்

95. ஒளி உமிழும் டையோடின், உமிழப்பட்ட ஒளிச் செறிவுக்கும் முன்னோக்கு மின்னோட்டத்திற்குமான தொடர்பானது :
(A) ஒளி உமிழும் டையோடின், உமிழப்பட்ட ஒளிச் செறிவானது முன்னோக்கு மின்னோட்டத்திற்கு தலைகீழ் விகிதத்தில் இருக்கும்.
(B) ஒளி உமிழும் டையோடின், உமிழப்பட்ட ஒளிச் செறிவானது முன்னோக்கு மின்னோட்டத்திற்கு நேர் விகிதத்தில் இருக்கும்.
(C) ஒளி உமிழும் டையோடின், உமிழப்பட்ட ஒளிச் செறிவானது முன்னோக்கு மின்னோட்டத்திற்கு சமமாக இருக்கும்.
